**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 7/2020**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 28.01.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | சங்கர்<br>(PW–3 Cross ) | தகப்பனார் பெயர்: | கனகரத்தினம் |
| கிராமம்: | பெருமங்கலம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 47/2026 |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 28.01.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.29)**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பரிவர்த்தனை செய்த நிலத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை அயிட்ட சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

2. பிரதிவாதிகள் அனைவரையும் வருவாய் நீதிமன்றம் குத்தகை கட்டவில்லை என்று வெளியேறுதல் உத்தரவு பிறப்பித்த விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தான் அனைத்து பிரதிவாதிகளுக்கும் சேர்த்து குத்தகை தொகை செலுத்தினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பரிவர்த்தனை ஏற்பட்ட விபரம் சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் இந்த தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. வாதி வசம் தாவா சொத்து இருந்திருந்தால் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.171/2019ல் வாதியை பிரதிவாதியாக சேர்த்திருப்பார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு விபரம் எனக்கு தெரியாது என்றாலும், வாதி எனக்கு தெரிந்தவர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**2,3,4 பிரதிவாதிகள் ஏற்கனவே தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.35)**